1972 ஆகஸ்ட் 19]

DR. H. V. HANDE : Sir, has the attention of the Government been drawn to the fact that the level of water in Mettur is very low and if so, what steps the Government are going to take to prevent the consequences of such a low level in the deltaic areas. Also, is it not a fact that chronically the ryots in the delta area suffer on that account and it is only after they embark on an agitation that water is released. So, may I know why there is an inordinate delay in the release of water from the Mettur Dam to the deltaic areas?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சாதாரணமாக, மேட்டூர் ரிசர்வாயரிலிருந்து ஜூன் மாதம் 12-ம் தேதி தண்ணீர் திறந்துவிடவேண்டுமென்ற உத்தாவு இருந்தாலும் நிலைமையைப் பரிசிலித்துப் பார்த்து தேவையான தண்ணீர் தேங்கிய பிறகுதான் நீர் திறந்து விடப்படுகிறது. 27—6—1972-ம் தேதி 73.09 அடி தண்ணீர் வந்தபிறகு, 7—7—1972-ல் தண்ணீர் விடப்படலாம் என்று தலைமைப்பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது தண்ணீர் குறைவாக இருந்தாலும் பின்னர் சமாளித்துக்கொள்ளலாம் என்ற நிலையில் தண்ணீர் விடலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஆரணி ஆற்றின் குறுக்கே அணை

* 196 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியபாளையம் அருகில் ஆரணி ஆற்றின் குறுக்கே சிறிய அணைக்கட்டு அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் முதல் நிலை ஆய்வில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தப் பெரிய பாளையம் திட்டத்தை மக்கள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் நடந்துவந்து பார்வையிட்டார்கள். எந்தத் தேதிக்குள் இந்தத் திட்டம் முடிவடையும் என்று அறிவிப்பார்களா ?

[1972 ஆகஸ்ட் 19

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இப்பொழுது இருக்கிற நிலவரப்படி 'The Chief Engineer has reported that a preliminary investigation for the construction of the dam across Arani river near Periapalayam in the Tiruvallur taluk, has been taken up by the local officers.' என்று சொல்லப்படுகிறது. இந்தப் பரிசீலனை முடிந்தபிறகு அது பற்றி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினு நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பாசன வசதிகள்

*197. **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனிப் பகுதியில் பாலாறு திட்டம், பரசலாறு திட்டம் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், முறையே அந்தத் திட்டங்களுக்கு செல வழிக்கப்படும் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மதுரை மாவட்டத்தில் பழனி வட்டத்தில் பாலாறு-பொறந்தலாறு, பாப்ப லாறு ஆகிய இரு திட்டங்களின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

(இ)

	திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்)
(1) பாலாறு-பொறந்தலாறு திட்டம்	281.60
(2) பரப்பலாறு திட்டம்	39.12

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்கள் எப்பொழுதுமுதல் முறைப்படி செயல்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டப்பணிகள் நிறைவேறிய பிறகு முறைப்படி செயல்படுத்தப்படும்.